★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✯ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 28உ புதன் (12 9—56) ★ ★ வெளியூர்: ஆவணி 29உ வியாழன் (13—9—56) [இதழ் 80

## 10,000 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளனவாம்!

புதுடில்லி, செப். 11—

இந்தியாவெங்குமாக 10,000 நியாய விலைக்கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றனவாம்.

மேற்கு வங்கத்தில் 2050; பம்பாயில் 2600; ஒரிசாவில் 2220; திரு-கொச்சியில் 2118—என்று கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றனவாம்.

இவற்றில் அரிசி, கோதுமை முதலிய உணவுப் பண்டங்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

# 'அதிகபட்ச இன்பம் பெறுவதே மனிதவாழ்வின் இலட்சியம்'

## 'இன்பம் பெறும் துறைகளுள் இலக்கியமும் ஒன்று'

## 'மனித உள்ளம் ஆரோக்கியமடைய இலக்கியம் பயன்படும்'

### 'கலைகளுள் சிறந்தது இலக்கியக் கலையே'

பொதுச்செயலாளர்

### இரா. நெடுஞ்செழியன் வழங்கிய 'இலக்கிய இன்பம்'

'இலக்கிய இன்பம்' என்ற தலைப்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக 8—9—56 மாலை, சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற ஒரு சிறப்புக் கூட்டத்தில், பொதுச்செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் ஒரு சிறந்த பேருரை நிகழ்த்தினார்கள்.

அவர் அன்று கூடியிருந்த மக்களுக்கு வழங்கிய 'இலக்கிய இன்ப'த்தை இங்கு எழுதிக் காட்டுவது என்பது இயலாத ஒன்றாகும்; அவர் ஆற்றிய பேருரையின் சாரம் மட்டும் தரப்படுகிறது:—

"கலைகளில் எல்லாம் தலைசிறந்த கலையாக இலக்கியக் கலை கருதப்படுகிறது.

"அந்த இலக்கியம் தரும் இன்பம் குறித்து இன்று நான் உங்களிடை பேசுகிறேன்.

"மனித வாழ்வை, உலகில், 'கலையியல்,' 'அறிவியல்' என்று இரு கூறுகளாக்கியிருக்கிறார்கள்.

"மூளையைத் தொடக்கூடியவை எல்லாம் அறிவியலிலும், உணர்ச்சியைத் தொடக்கூடியவை எல்லாம் கலையியலிலும் அடங்குபவையாகும்.

"பொருள்களை உணர்ச்சியினால் அளவிடும்போது, அது கலையாகிறது; அந்தக் கலையை விஞ்ஞான விளக்கத்திற்கு உட்படுத்தக்கூடாது; உட்படுத்தினால் குழப்பமே விளையும்.

"பொருள்களுக்கு விஞ்ஞான விளக்கம் தருவதுதான் அறிவியலாகும்; ஆகவே, அறிவியலையும் கலையியலையும் குழப்பிக்கொள்ளக் கூடாது.

"கைவேலை செய்பவன் வேலைக்காரன்; கையாலும் மூளையாலும் வேலை செய்பவன் வினைஞன். கை, மூளை, உணர்ச்சி இவைகளை ஒன்றுபடுத்தி வேலை செய்பவன் கலைஞன் என்று பாகுபடுத்தலாம்

"பல கலைகளிலும் மிகச் சிறந்தது இலக்கியக் கலையாகும்; இலக்கியக் கலை மனித உணர்ச்சிக்குக் கிளர்ச்சித் தருவதாகும்.

"ஓவியக் கலையை எடுத்துக்கொள்வோம்—நீல மலையை ஒரு ஓவியன் ஓவியமாக்குகிறான்; அந்த ஓவியத்தில் நீல மலையின் தோற்றத்தை மட்டுமே நாம் காண முடியும்; ஆனால் அந்த நீலமலையில் வீசும் தென்றலின் குளிர்ச்சியையோ, சிந்து பாடும் சிற்றாறுகளின் ஓசையையோ அனுபவிக்க முடியாது.

"சிற்பக் கலையைக் காண்போம்—சிற்பி ஒரு மனித உருவத்தைச் செதுக்குகிறான்; இவன் தோற்றத்தோடு, உருவத்தின் பருமனையும் அழகுபட எடுத்துக் காட்டமுடியும்; உள்ளத்து உணர்ச்சிகளில் ஏதேனும் ஒன்றை மட்டுமே அந்த சிலையில் பிரதிபலிக்கச் செய்ய முடியும்.

"ஆனால், இலக்கியக் கலை எப்படிப்பட்டது?

'நீலமலையை நம் கண்முன் நிறுத்துவான் கவிஞன். அங்கே மலர்ந்திருக்கும் மலர்களின் மணத்தை நாம் நுகரச் செய்வான்; வீசுகிற தென்றலின் இனிமையை நமக்கு அள்ளித் தருவான்; ஓடுகிற சிற்றாறுகளின் ஓசையை நமக்குக் கேட்கச் செய்வான்; கோடிக்கணக்கான உணர்ச்சிகளையும் நமக்கு உணர்த்துவான். இதனால் தான், வேறெல்லாக் கலைகளையும்விட இலக்கியக் கலையைப் பெரியது—சிறந்தது என்கிறார்கள், அறிஞர் பெருமக்கள்!

"ஆயுந்தோறும் ஆயுந்தோறும் இன்பம் தரும் தமிழில், அது போன்ற இலக்கியங்கள் எண்ணற்றவை உண்டு!

"'தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு' என்றான் வள்ளுவன்.

"தோண்டத் தோண்ட மணற்கேணியில் நீர் ஊறுவதுபோல, மாந்தர், கல்வி கற்கக் கற்க அறிவு ஊறும் என்பது பொருள். இது போலத்தான் ஆராய ஆராயத் தமிழ், இனிமையைத் தரும்—இன்பம் தரும்.

"மனித வாழ்வின் இலட்சியமே, அதிகபட்சமான இன்பத்தைப் பெறுவதுதான்.

"உழைப்பைக் குறைத்து, வசதிகளைப் பெருக்கிக்கொண்டு, துன்பங்களைத் தவிர்த்து, அதிகபட்சமான இன்பம் துய்க்க வேண்டுமென்பது, உலக மக்களின் மிக உன்னதமான இலட்சியமாகும்.

"அப்படி மனிதர்கள் இன்பம் பெறுவதற்காக உள்ள பல துறைகளில், இலக்கியமும் இன்பம் தரும் ஒரு துறையாகும்.

"மக்கள், வாழ்வுக்காக அவதிப்படுகிற நேரத்தில், இதுபோன்ற இலக்கிய ஆராய்ச்சிகள் தேவைதானா — என்று கேட்கக்கூடும் சிலர்; நிச்சயமாகத் தேவைதான்.

"உடல் சுகாதாரத்திற்காக, நாம் சில பல காரியங்களைச் செய்கிறோம்—சுத்தமான காற்று வேண்டும்; சுத்தமான இருக்கை வேண்டும்; சுகாதாரமான உடை வேண்டும்; சத்துள்ள உணவு வேண்டும்—என்றெல்லாம் அறிகிறோம். அது போலவே, உள்ள சுகாதாரத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் சில பல காரியங்கள் தேவையல்லவா?

"எந்த விளைவுகள் நாட்டில் மலரவேண்டும் என்று விரும்புகிறோமோ அதற்கான கருத்துக்கள், நாட்டு மக்களின் உள்ளத்தில் ஊன்றப்படுதல் வேண்டும். அப்படி உள்ளத்தில் கருத்துக்களை ஊன்றுவதற்கு முன்னால், மக்களின் உள்ளம் ஆரோக்கியமானதாக —சுகாதாரமானதாக இருத்தல் அவசியமாகும். ஆனால், இன்று, மக்களின் உள்ளம் ஆரோக்கியமானதாக — சுகமானதாக இல்லை. நெடி வீசிக் கொண்டிருக்கிற நிலையில் பெரும்பாலான மக்களின் உள்ளம் முடைநாற்றமடிப்பதாக—சுகாதாரமற்றதாக இருப்பதைக் காண்கிறோம்.

"அந்த உள்ளங்களைச் சுகாதாரப் படுத்துவதற்கு இலக்கிய ஆராய்ச்சிகள் பயன்படக் கூடியவைதான்.

"இலக்கியம் ஒரு பெருங்கடல்; நான் எத்தனைதான் எடுத்துச்

(4-ம் பக்கம் பார்க்க)

## 'விசைத்தறி திட்டத்தைக் கைவிடுக'

### தோழர் ஈ. வெ. கி. சம்பத் கலந்துகொண்ட குன்றத்தூர் தி. மு. க. கூட்டத்தில் தீர்மானம்

"கைத்தறித் தொழிலையே நம்பியிருக்கும் இலட்சக்கணக்கான ஏழை நெசவாளர்தம் வாழ்வை, விசைத்தறி புகுத்தும் திட்டம் இப்பொழுதுள்ள சூழ்நிலையில் மிகவும் பாதிக்குமாதலால், விசைத்தறித் திட்டத்தை, பல நெசவாளர் அமைப்புகள் எதிர்த்த பின்னும் புகுத்துகிற சர்க்காரின் போக்கை வன்மையாகக் கண்டிப்பதுடன், திட்டத்தை உடனடியாகக் கைவிடுமாறும் இக்கூட்டம் சர்க்காரைக் கேட்கிறது"

என்று, சென்னையை அடுத்த குன்றத்தூர் தி. மு. கழகச் சார்பில் 11—9—56-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நகர தி. மு. கழக அலுவலகம் முன்பாக கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் ஏராளமான நெசவாளர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்திற்குச் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் டி. என். சம்பந்தம் தலைமை தாங்கினார். அவர் தனது முன்னுரையில், விசைத்தறி புகுத்தும் திட்டம் நெசவாளர்களின் வேலையைப் பறித்துக் கொண்டு அவர்களை பிச்சைக்காரர்களாக வீதியில் திரத்தும் அபாயமுடையது என்பதை புள்ளி விவரங்களுடன் விளக்கினார்.

பின்னர், நகர தி. மு. கழகச் செயலாளர் சிவகுமாரன் இரு தீர்மானங்களைக் கொண்டு வந்தார்; மக்கள் கையொலி மூலம் அவற்றை ஒருமனதாக நிறைவேற்றினர்.

அடுத்துத் தோழர் சி. வி. எம். அண்ணாமலை சிறிதுநேரம் பேசினார்.

பின்னர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கிவிட்டு, அரசியல் நிலை குறித்து பேசத் துவங்கினர்.

அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே பெருமழை வந்துவிட்ட காரணத்தால், தனது உரையைச் சுருக்கிக்கொள்ள வேண்டியதாயிற்று.

தலைவர் முடிவுரையுடன், நன்றி நவிலப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

(4-ம் பக்கம் பார்க்க)

## சூயஸ் தகராறு: இன்றைய நிலைமை

மென்சீஸ் குழுவினர் எகிப்திய குடியரசுத் தலைவர் நாசருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தன. நாசர் உறுதிதளராது நிலைகுலையாது மென்சீஸ் திட்டத்தை ஏற்க மறுத்தார். இது, மிகவும் பயங்கரமான சூழ்நிலையை உண்டாக்கிஇருப்பதாகப் பிரெஞ்சு—பிரிட்டிஷ் பிரதமர்கள் கருதுகின்றனர்.

சூயஸ் பிரச்சினையில் சர்வதேச ஒப்பந்தத்திற்கு மாறாக, நியாயமற்ற முறையில் நாசர் நடந்துகொண்டால், தக்க முறையில் தடுக்க உறுதி கொண்டிருப்பதாக அவ்விரு பிரதமர்களும் கலந்து பேசிய பின் அறிவித்துள்ளனராம்.

★

### 'உலகப் போர் மூளும்'

நாசர் எச்சரிக்கை

"சூயஸ் தகராறில் எகிப்து மீது தாக்குதல் ஏற்படுமாயின் உலகப் போர் மூளும்" என்று எகிப்தியத் தலைவர் நாசர் எச்சரித்துள்ளார்.

'சர்வ தேசக் கூட்டுறவு ஆதிக்கத்தின்கீழ் சூயஸ் நிர்வாகத்தை விடுவதற்கு எகிப்து எப்பொழுதும் சம்மதிக்காது' என்று அவர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

★

### சூயஸ் தகராறு: ஐ. நா. செல்லும்?

மென்சீஸ் முயற்சி தோல்வியடைந்ததைக்கண்டு பிரிட்டன், பிரெஞ்சு நாடுகள் சூயஸ் தகராறை ஐ. நா. சபைக்குக்கொண்டு செல்லுமென்றும், சமாதான முறையில் தகராறைத் தீர்த்துக்கொள்வதற்கு இந்த முயற்சி பயன்படுமென்றும் நம்பப்படுகிறது.

## சட்டக்கல்லூரியில் ஈ. வெ. கி. சம்பத்

### 'குற்றமும் தண்டனையும்' குறித்து கருத்துரை

சென்னை, செப் 12—

சென்னை சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்தின் சார்பில் நேற்று மாலை 5 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் ஏராளமான கல்லூரி மாணவர்களும் பெருவாரியான தோழர்களும் கலந்து கொண்டனர்

கூட்டத்திற்கு தமிழ் மன்றத் தலைவர் (மாணவர்) தோழர் கஜபதி தலைமை தாங்கினார்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 'குற்றமும் தண்டனையும்' என்னும் பொருள் குறித்து ஒரு சுருங்கிய சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

மன்றச் செயலாளர் நன்றி நவிலகூட்டம் இனிதுமுடிவுற்றது.

நம் நாடு

சென்னை 12—9—'56 புதன்

# காங்கிரஸ் சர்க்காரின் கையாலாகாத்தனம்!

★

அரிசி முதலிய அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலை கடந்த ஆறேழு மாதங்களில் ஒன்றுக்கு இரண்டு மூன்று மடங்குகள் ஏறிப்போயிருப்பதால், ஏழை எளிய, நடுத்தர மக்கள், தொழிலாளர்கள், பாட்டாளிகள் ஆகியோர் படும் வேதனை சொல்லி முடியாது.

வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் பற்றுக்குறை வருமானத்தாலும் ஏற்கனவே அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள், இந்த விலையேற்றம் எனும் விஷக்கடியால்வேறு துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

விலைகள் ஏறுமுகமான நாளிலிருந்து 'விலைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தக்க நேரம் பார்த்திருக்கிறோம்; விலை ஏற்றத்திற்கான காரணங்களை ஆராய்கிறோம்' என்று கூறத் துவங்கி, விலைகள் ஏறிப்போன நிலையிலேயே ஸ்திரத்தன்மை அடையும்வரை 'எப்படியும் கட்டுப்படுத்தி விடுவோம்; கவலை விடுக' என்றே ஆட்சியாளர்கள் பேசி வந்திருக்கின்றனர்.

'உணவு விவகாரத்தில் இந்தியா தன் நிறைவு பெற்றுவிட்டது; முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பயனாக உணவு உற்பத்தி பலமடங்கு பெருகியிருக்கிறது; ஏற்றுமதி செய்கிற அளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது' என்றெல்லாம் பேசினார்கள். அதேபோது, எண்பது கோடி ரூபாய்க்கு மேல் உணவுப் பண்டங்களை இறக்குமதி செய்வதற்கும் திட்டமிட்டிருக்கிறார்கள்.

ஆட்சியாளர்களின் இந்த முரண்பட்டப் பேச்சுகளுக்கிடையே விலைவாசிகள், வானத்தை நோக்கி இறக்கை கட்டிப் பறந்து கொண்டிருக்கின்றன.

விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் பேராசை கொண்ட பெரும் வியாபாரிகளில் சிலர், ஏராளமாகக் கொள்ளை இலாபம் அடிக்கும் நோக்குடன் உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்துள்ளார்கள் என்பது தான் என்று கூறினார்கள். ஆனால் அதே நேரத்தில், அப்படிப் பொருள்களைப் பதுக்குவோரைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும் என்று கோரப்பட்டபோது, ஏதேதோ கூறி மழுப்ப முற்பட்டார்கள்.

பின்னர், 'விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்குத் திட்டமிட்டுவிட்டோம்; கிடங்குகளில் நாங்கள் சேமித்து வைத்திருக்கும் உணவுப் பொருள்களை நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப் போகிறோம்; அப்போது, ஏறிய விலைகள் தாமாகவே இறங்கித்தானாக வேண்டும்; இதுதான் எங்கள் திட்டம்' என்றுகூறி, உணவுப் பொருள்களைக் கிடங்கிலிருந்து சந்தைக்கு அனுப்பினார்கள்; ஆனாலும், சர்க்கார் கூறியபடி விலைகள் இறங்கவில்லை.

நேற்று முன்தினம் ரிசர்வ் பாங்க் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'உணவுப் பண்டங்களின் விலைகள் இன்னும் ஏறுமுகத்தில்தான் இருக்கின்றன' என்ற உண்மை வெளிப்படுத்தப்பட்டிருப்பதின் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு சென்னை வந்த டில்லி உணவு இலாகா துணை அமைச்சர் எம். வி. கிருஷ்ணப்பா, 'தென்னாட்டில் அரிசி விலை ஏற்றத்தைத் தடுத்து நிறுத்தவும் கட்டுப்படுத்தவுமாக தென் மாநிலங்களில் சுமார் 2,000 நியாய விலைக் கடைகளைத் திறக்கப் போகிறோம்; அந்தக் கடைகள் மூலம் சர்க்கார் அரிசி விநியோகித்தால், விலை ஏற்றம் தடுக்கப்பட்டுவிடும்,' என்று கூறினார். அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் தெரியவருகிறது.

ஆனால் இந்த ஏற்பாடு, உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி பெறுமா என்பதில் நமக்குச் சந்தேகமே! ஏனெனில், இப்போது நியாய விலைக்கு சென்னை போன்ற நகரங்களில் விநியோகிக்கப்படுகிற அரிசி மகாமட்டமானது என்பதை சர்க்கார் ஒப்பமறுக்கமுடியாது. அந்த மட்டமான அரிசியை மக்கள் விரும்பி வாங்குவதற்கு இயலவில்லை. தொடர்ந்து, திறக்கப்படவிருக்கிற இந்த 2,000 நியாயவிலைக் கடைகளிலும் மிக மட்டரகமான அரிசியே விற்கப்படுமானால், கடைகள் திறக்கப்பட்டும் பயனில்லை; சர்க்காரின் திட்டம் வெற்றி பெறுவது துர்லபம்.

சர்க்கார், விலைஏற்றத்திற்கு ஒரு காரணத்தைக்கூறி, அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதாகப் பேசிக்கொண்டிருக்கும்போதே ரிசர்வ் பாங்கி, உணவுவிலை ஏற்றத்திற்குவேறு மூன்று காரணங்களைக் கூறியிருக்கிறது.

எந்தக் காரணங்கள் சரியானவை என்பதில் மக்களுக்குத் தெளிவு ஏற்பட முடிவதில்லை.

எனவே, எந்தக் காரணங்களால் விலை ஏறியிருந்தாலும், பாதிக்கப்படுவது சாதாரண ஏழை எளிய மக்கள் என்பதால், சர்க்கார், விலைகளைக் கட்டுப்படுத்தத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், இடைக்காலத்தில், விலை ஏற்றத்திற்குத் தக்கவாறு உழைக்கும் மக்களுக்கு ஊதியம் கிடைக்குமாறு செய்ய வேண்டுவது அவசியம்.

இந்த உணவு விவகாரத்தை, கடந்த ஒன்பதாண்டுக் காலமாக ஒரு நிலைப்படுத்த முடியாதிருப்பது, காங்கிரஸ் சர்க்காரின் கையாலாகாத் தனத்தையே எடுத்துக் காட்டுவதாகும்.

## தானாகவே இயங்கும் தறிகள்!

### ஆலைகளில் புகுத்துவது பற்றி பிரதமர் நேரு

புதுடில்லி, செப். 10—

"தற்போது ஆலைகளிலுள்ள தறிகளை மாற்றி, அவற்றிற்குப் பதிலாக தானாக இயங்கும் தறிகளை அமைக்கலாம்; உயர்தரமான தொழில் நுணுக்க முறைகளைக் கையாளுவதன்மூலம்காலப்போக்கில் அதிகம் பேருக்கு வேலை கிடைக்க வழி ஏற்படச் செய்யலாம்; ஆனால், வேலையில்லாத் திண்டாட்டத்தில் கொண்டு விடக்கூடிய ஒரு நடவடிக்கையை எடுப்பதற்கு முன் அதுபற்றி நாம் தீர்க்கமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்; இதைக் கருத்தில் கொண்டுதான் எந்த முயற்சியையும் எடுக்க வேண்டும்;"

என்று, மாநிலங்கள் சபையில் பிரதமர் நேரு கூறியிருக்கிறார்.

"இப்போதைய ஆலைத் தறிகளை தானாக இயங்கும் தறிகளாகப் படிப்படியாக மாற்றியமைக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா?" என்று உறுப்பினர் ஒருவர் கேட்டதற்கு, அமைச்சர் நித்யானந்த கனுங்கோ 'இல்லை' என்று கூறிவிட்டு மேலும் சொன்னார்:—

"வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாது என்று மாநில சர்க்கார்கள் உறுதி அளித்தால்தான் இப்போதுள்ள காலிகோ தறிகளை தானாக இயங்கும் தறிகளாக மாற்ற முடியும்; ஆனால், ஏற்றுமதிக்கு மட்டும் துணி உற்பத்தி செய்வதற்கு 14,000 தானாக இயங்கும் தறிகளை ஏற்படுத்தும் ஒரு திட்டத்தை சர்க்கார் ஏற்றிருக்கின்றனர். காலிகோ தறி—தானாக இயங்கும் தறி இவைகளில் உற்பத்தியாகும் துணியின் விலையில் அதிக வித்தியாசம் எதுவும் இருக்காது; தானாக இயங்கும் தறியில் தயாராகும் துணியின் தரம் மேலானதாக இருக்கும்"

### சித்தாறு நீர்ப்பாசனத் திட்டம்: சென்னையின் நிலை

இப்போது திரு-கொச்சி மாநிலத்திலிருக்கும் தமிழ்த் தாலுகாக்கள் நவ. 1-ந்தேதிக்குப் பிறகு சென்னை மாநிலத்துடன் இணையும்போது, சித்தாறு நீர்ப்பாசனத் திட்டம் சென்னை சர்க்காரால் மேற்கொண்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்று தெரிகிறது.

இந்தத் திட்டத்தினால் சுமார் 20 ஆயிரம் ஏகருக்குப் பாசன வசதி கிடைக்குமென்றும், திரு-கொச்சி சர்க்கார் ஏற்கனவே இதுபற்றி பூர்வாங்க பரிசீலனை செய்திருக்கிறார்களென்றும் தெரிகிறது. இந்தத் திட்டத்திற்கு ரூ. 1½-கோடி செலவாகும்.

### கேரளத்திற்கு மாற்றப்படும் சர்க்கார் ஊழியர்கள்

சென்னை சர்க்காரிலிருந்து புதிய கேரள மாநிலத்திற்கு மாற்றப்படவிருக்கும் ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் நவ. 1-ந் தேதியன்று புதிய கேரள மாநிலத்திற்குச் செல்லக்கூடுமாம். இவர்களில் யாருடைய சேவையாவது திரு-கொச்சி சர்க்காருக்கு உடனடியாகத் தேவைப்படுமானால் அவர்கள் நவ. 1-ந் தேதிக்கு முன்னரே அனுப்பப்படுவார்களாம்.

### 500 இடங்களுக்குப் போட்டியிடுவார்களாம்!

பெரெய்லி, செப். 11—

அடுத்த பொதுத் தேர்தலில் இந்தியா முழுவதிலும் மொத்தமுள்ள 3,500 இடங்களில் 500-இடங்களுக்கு சோஷலிஸ்டுகள் போட்டியிடுவார்களாம்!

ஓட்டர்களில் ஒரு சத விகிதத்தினராவது சோஷலிஸ்டுகளாக உள்ள இடங்களில் மட்டுமே சோஷலிஸ்டுகள் போட்டியிடுவார்களென்று டாக்டர் லோகியா கூறியுள்ளார்.

## பெருகி வரும் மக்கள் தொகை

### இந்தியாவின் பெரும் பலமாம்!

பம்பாய், செப். 9—

"பிறந்திருக்கிற ஒவ்வொருவனும், மேலும் பலர் பிறப்பதை விரும்பவில்லை என்பதை அறிய நான் மிக ஆச்சரியமடைகிறேன்,"

என்று, இலாகா இல்லாத அமைச்சர் வி. கே. கிருஷ்ணமேனன் இங்கு நடைபெற்றக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டாராம்!

நாட்டில் இன்று ஏற்பட்டுவரும் மக்கள் பெருக்கம், நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்று நிலவும் கருத்து பற்றி அவர், 'இந்தப் பிரச்சினை குறித்து நான் அச்சப்படவில்லை' என்று குறிப்பிட்டாராம்.

மேலும் அவர், 'இந்த நாட்டின் மிகப் பெரும் பலம் எல்லாம், நாட்டில் பெருகிவரும் பல இலட்சக்கணக்கான மக்கள் தொகையே ஆகும்' என்றும் குறிப்பிட்டாராம்!

## மலையாள குடும்பங்கள் குடியேற்றம்

### அசாம், மைசூர் மாநிலங்களில் இடம் கிடைக்குமா?

புதுடில்லி, செப். 11—

"போபால், அந்தமான் தீவுகள் ஆகிய இடங்களில் மட்டுமின்றி அசாம், மைசூர் ஆகிய மாகாணங்களிலும் நிலமில்லாத மலையாளக் குடும்பத்தினர் குடியேற திரு-கொச்சி அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது" என்று, மக்கள் சபையில் உள்நாட்டுத் துறைத் துணை அமைச்சர் தத்தார் கூறியுள்ளார்.

"மலையாளக் குடும்பத்தினர் குடியேறுவதற்காக நிலங்கள் கிடைக்குமா?" என்று மைசூர், அசாம் மாகாண அரசாங்கங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு மாகாணங்களிலும் சுமார் ஆயிரம் குடும்பங்களை குடியமைக்க திரு-கொச்சி அரசாங்கம் திட்டம் வகுத்திருக்கிறது" என்றும் அமைச்சர் கூறினார்.

'திரு-கொச்சி மாகாணத்திலிருந்து 200 குடும்பங்களை போபால் பிரதேசத்தில் குடியேற்றும் திட்டம் முற்றிலும் வெற்றிகரமாக அமுல் நடத்தப்பட்டது" என்று அமைச்சர் மேலும் கூறினார்.

## உணவு உற்பத்தியை அதிகரிக்கும் வாய்ப்பு

### சென்னை மாநிலத்தில் அதிகம் உண்டாம்!

புதுடில்லி, செப் 10 —

அகில இந்திய சராசரி விகிதத்தைவிட சென்னை மாநிலத்தில் பயிர்களின் விளைச்சல் அதிகமாக இருப்பதாகத் திட்டக் குழுவின் அதிகாரபூர்வமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்; அன்றியும், உணவு உற்பத்தியை அதிகரிக்கும் வாய்ப்பு சென்னை மாநிலத்தில் அதிகமாக இருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறதாம்.

முசோரியில் நடைபெற்ற மாநில விவசாய மந்திரிகள் மாநாட்டில் சென்னைப் பிரதிநிதிகள், மேலும் இம்மாநிலத்திற்கு ரூ. 4,22,00,000 உதவி தரப்பட்டால் உணவுத் தானிய உற்பத்தியை 4-இலட்சம் டன்களிலிருந்து 13-இலட்சம் டன்களாக உயர்த்த முடியுமென்று தெரிவித்துள்ளனர்; தற்போது மேலும் ரூ 8,50,00,000 தேவைப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது; இதன் மூலம் 6-இலட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது; விவசாயக் கல்வி ஆராய்ச்சிக்காக ரூ. 1-கோடியும், வர்த்தகப் பயிர்களுக்காக ரூ. 20-இலட்சமும் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தபால் விகிதங்களும் தசாம்ச முறையில்!

புதுடில்லி, செப். 10—

மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்ட இந்தியத் தபால் அலுவலக மசோதாவை மாநிலங்கள் சபையும் நிறைவேற்றியிருக்கிறது.

தசாம்ச நாணய முறையில் தபால் விகிதங்கள் ஏற்படுத்த இந்த மசோதா வழிவகை செய்கிறது.

விவாதத்தின்போது, மத்திய பாரத் காங்கிரஸ் உறுப்பினர் ரகுவீர் சிங் என்பார், தபால் இலாகாவில் வேலைத் திறமைக் குறைவையும், தபால்கள் கொடுக்கப்படுவதில் ஏற்படுகிற தாமதத்தையும் குறிப்பிட்டு கண்டித்திருக்கிறார்.

ஐதராபாத்தைச் சேர்ந்த கிஷின் சந்த் என்ற ம. சோ. கட்சி உறுப்பினர், உள்நாட்டுத் தபால்களுக்கும், ரிஜிஸ்தர் செய்யப்பட்ட பத்திரிகைகளுக்கும் தபால் விகிதங்கள் குறைக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

விவாதத்திற்குப் பதிலளித்த மந்திரி ராஜ்பகதூர், ரிஜிஸ்தர் செய்யப்பட்ட பத்திரிகைகளைப் பொறுத்த வரையில் சர்க்கார் இன்று வரையில் ரூ. 1,18,00,000 நஷ்டம் அடைந்திருக்கிறது என்றும், இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் இம்மசோதா, மறைமுகமான வரி விதிப்பு எதையும் உள்நோக்கமாகக் கொண்டதல்ல என்றும், தசாம்ச நாணய முறையைக் கொண்டுவரவே அது தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

## குருடர் பள்ளி வளர்ச்சி

### சர்க்கார் திட்டங்கள் விளக்கம்

சென்னை, செப். 9—

சென்னை—பூந்தமல்லியில் உள்ள குருடர் பள்ளியில் உயர்தரப் பள்ளிப் பிரிவு ஒன்றை ஆரம்பிக்க சர்க்கார் அனுமதித்திருக்கின்றனராம்.

குருடர்களைப் பயிற்றுவதற்கான ஆசிரியர்கள் பற்றுக் குறையை நிவர்த்தி செய்ய இங்கு ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பிரிவு ஒன்றைத் துவக்கவும் சர்க்கார் ஒப்புதல் அளித்திருக்கின்றனராம்.

மேலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குறைந்தபட்சம் நான்கு நடமாடும் குருடர் பள்ளிகள் ஆரம்பிக்கப்படும் என்று சர்க்கார் நம்புகின்றனராம்.

மாநிலம் முழுமையிலும் இப்போது அதிகரித்து வருகிற குருட்டு மாணவர்களின் தொகைக்கு ஏற்றாற்போல் அவர்களுடைய தேவையைச் சமாளிக்க அவர்களுக்கான புத்தகங்களைத் தயாரிக்கும் அச்சுக்கூடம் ஒன்றையும் நிறுவ சர்க்கார் எண்ணியிருக்கின்றனராம்.

பயிற்சி பெற்ற, கல்வி பெற்ற குருடர்களுக்கு அவர்கள் செய்யத் தகுந்த வேலையான நீக்குச்சித் தொழில்கள் போன்றவற்றில் நிச்சயமாக வேலை கிடைக்கும் என்று சர்க்கார் திட்டமிட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### கண்களைத் தானம் செய்ய அமைச்சர் முன்வருகிறார்

பூந்தமல்லி குருடர் பள்ளியின் 25-வது வருட விழாவில் பேசிய மாநில நிதி-கல்வி அமைச்சர் சுப்பிரமணியம், குருடர்கள், கண் பார்வை மங்கிப்போனவர்கள் ஆகியோரின் நலனுக்காகப் பொதுமக்கள், 'கண் பாங்கி'களில் தங்கள் உயிர் பிரிந்தபின், கண்களைக் கொடுத்து உதவும்படி கேட்டுக் கொண்டார்.

மருத்துவ விஞ்ஞானத்தின் வளர்ச்சி, அபிவிருத்தி ஆகியவற்றுக்கும் மக்கள் தங்கள் உதவியைத் தரும் வகையில், தங்கள் பிரேதங்களைக்கொடுத்து உதவுமாறும் கேட்டுக்கொண்டார்.

அவர் தம்முடைய கண்களையும் கூட 'கண் பாங்கி'க்குக் கொடுக்க இருப்பதாகக் கூட்டத்தில் அறிவித்திருக்கிறார்.

# இரயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்தம்?

## கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை

நாகபுரி, செப் 9—

தங்களின் கோரிக்கைகளை சர்க்கார் நிறைவேற்றிக் கொடுக்காததால் நேரடி நடவடிக்கையின் இரண்டாவது கட்டமாக, அகில இந்திய இரயில்வே இலாகா குமாஸ்தாக்கள், 'பேனா தொடக் கூடாது' என்று அவர்கள் சங்கத்தவர் முடிவு செய்திருக்கின்றனர்.

மத்திய ஊதியக் குழு சிபாரிசுகளின்படி சம்பளம் தரப்பட வேண்டும் என்பது குமாஸ்தாக்களின் மிக முக்கியமான கோரிக்கையாகும்.

இதுபோன்ற இன்னும் பல கோரிக்கைகளுக்காகப் பேனா தொடாமல் வேலைநிறுத்தம் செய்வதுபற்றி வரும் அக்டோபர் 10-ந் தேதியன்று ஊழியர்களிடை வாக்கெடுப்பு நடத்துவது என்றும் சங்கத்தின் பொதுக்குழு முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

★

# அறிவும் ஆற்றலும் உள்ள இளைஞர்கள்

### கிராமத்திலிருந்துவெளியேறுவதை தடுப்பதற்கு முயற்சி

### மதுரை, கோவையில் உயர்தர கல்வி நிலையங்கள்

இந்தியாவில் பெரும்பாலான உயர்தரக் கல்வி நிலையங்கள், நகரிலேயே குவிந்துள்ளதால், கிராமங்களில் உயர்தரக் கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருந்து வருகின்றன. எனவே, அறிவும் ஆற்றலும் படைத்த கிராமத்து மாணவர்கள் தத்தம் கிராமங்களைவிட்டு, நகரங்களுக்குச் சென்றுவிடுகிறார்கள். அதனால், கிராமங்களின் நிலைமை மேலும் சீர்கெட்டு விடுகிறது; உயர்தரக் கல்வி போதிப்பதற்குத் தேவையான வசதிகளுக்கு அங்கு ஏற்பாடு செய்வதும் பின்னும் கடினமாகிவிடுகிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்காக இந்தியாவில் பத்து இடங்களில் கிராம உயர்தரக் கல்வி நிலையங்களை அமைப்பதற்கு ஏற்பாடாகியிருக்கிறது; மதுரை, கோயமுத்தூர் இதில் இடம் பெறுகிறது.

இந்தியாவில் கலாசாரத்துறை, தொழில், கலைத்துறை, தொழில் நுட்பம், இலட்சிய ஆதாரங்கள், அனுபவ சாத்திய வேலைகள் ஆகியவைகளுக்கிடையே இருந்துவருகிற வேற்றுமைகளைக் குறைப்பதற்கு இக்கல்வி நிலையங்கள் வழி செய்யுமாம்!

# உணவு உற்பத்திக்கு ரூ. 10 கோடி தருக!

### திட்டக் குழுவிடம் சென்னை கோரிக்கை

புதுடில்லி, செப் 10—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உணவு உற்பத்தியை 6 இலட்சம் டன்னுக அதிகரிப்பதற்கு சென்னை சர்க்காருக்கு மேலும் ரூ. 10 கோடி ஒதுக்குமாறு திட்டக்குழுவை சென்னை சர்க்கார் தூதுக்குழு ஒன்று வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

புதியதோர் அடிப்படையில் உணவு. விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்கான யோசனைகள் குறித்து, சென்னைப் பிரதிநிதிகள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

உணவு உற்பத்தியை அடுத்த 2 அல்லது 3 ஆண்டுகளுக்குள் கணிசமாக அதிகரிக்க சென்னை சர்க்கார் எல்லாவித முயற்சிகளையும் முழு மூச்சுடன் மேற்கொள்ள வேண்டுமென திட்டக் குழு வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

# 'சம்பள உயர்வு தராவிட்டால் வேலைநிறுத்தம் செய்வோம்'

## ஐதராபாத் சர்க்காருக்கு 18,000 தொழிலாளர் எச்சரிக்கை

ஐதராபாத், செப். 10—

ஐதராபாத் சர்க்காருக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் சுமார் 18,000 பேர்கள், தங்களுக்கு உடனடியாகச் சம்பள உயர்வு தராவிட்டால் வரும் செப். 18-ந் தேதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சர்க்கார் நடத்தும் பஸ் போக்குவரத்து, மராமத்து இலாகா, தொழிற்சாலைகள், மருத்துவமனைகள் முதலியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள்தான் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாகக் கூறியுள்ளனராம்.

இந்தத் தொழிலாளருக்கு எல்லா இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

★

# தென்னாட்டில்போக்கு-வரத்து வசதிக் குறைவு

## மக்கள் சபை உறுப்பினர் முறையீடு

புதுடில்லி, செப். 10—

"தென்னாட்டில் போக்கு-வரத்து வசதிகளுக்கான தேவைகள் கவனிக்கப்படாமல் இருப்பது வருந்தற்குரியதாகும். சேலம் நிலக்கரி, அலுமினியத் தொழில் திட்ட வேலைகளையொட்டி அங்கு தொழில், வர்த்தகத் துறைகள் மேலும் விரிவாகும்; அப்போது அதிகமான அளவில் போக்கு - வரத்து வசதிகள் தேவைப்படும். குறிப்பாக சேலம் மாவட்டத்தில் போக்கு-வரத்து வசதிக்குறைவுகள் உள்ள இடங்களில் தேவையையொட்டி, சேலம் — பெங்களூர் இரயில் பாதை அமைக்கப்படவேண்டும்" என்று, சென்னையைச் சேர்ந்த காங்கிரஸ் மக்கள்சபை உறுப்பினர் தோழர் சி ஆர். நரசிம்மன் வற்புறுத்தியிருக்கிறார்.

தென்னாட்டில் சேலம் பழுப்பு நிலக்கரித் திட்டமும், அலுமினியத் திட்டமும் துவக்க அனுமதி அளிக்கப்பட்டது மகிழ்ச்சிக்குரியதே என்றும், பழுப்பு நிலக்கரித் தொழில் வெற்றி பெறுமானால் தென்னாட்டின் நிலக்கரி பிரச்சினை தீர்ந்துவிடும் என்றும், அதனால் அங்கு மேலும் பல தொழில்கள் உருவாக உதவியாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், உயர்தரக் கணித நுட்பம் தெரியாவிட்டால் நவீன விஞ்ஞானத் துறையில் அபிருத்தி கிட்டாதாகையால், தென்னாட்டில் கணித ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றும் நிறுவப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

# கண்டனம் வலுக்கிறது!

### விசைத்தறித் திணிப்புக்கு மேலும் ஒரு கைத்தறிக் குழு உறுப்பினர் கண்டனம்

திருச்சூர், செப். 8—

"35,000 விசைத்தறிகளை ஏற்படுத்துவது என்ற மத்திய சர்க்காரின் தீர்மானம் செயல்முறைக்குக் கொண்டுவரப்படுமானால், நாட்டிலுள்ள கைத்தறித் தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆட்பட்டு வேலையின்றித் தவிக்க நேரிடும்; இதன் விளைவு, இந்தக் கைத்தறித் தொழிலே செத்தொழிவதுதான்"

இவ்வாறு கைத்தறிக் குழு உறுப்பினரான பாலகிருஷ்ணன் என்பார், கைத்தறித் தொழிலில் விசைத்தறியைப் புகுத்தும் மத்திய சர்க்காரின் கொள்கையைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் விசைத்தறியுடன் கைத்தறி எவ்வகையிலும் போட்டியிட முடியாத ஒன்று என்றும் எனவே, இந்தத் துறையில் கவனஞ்செலுத்திவரும் எல்லாரும் சர்க்காரின் இந்தப் போக்கினை எதிர்க்குமாறு தாம் கேட்டுக்கொள்வதாகவும் அறிவித்திருக்கிறார்.

# உள்ளாட்சிக் கழகங்களில் தாழ்த்தப்பட்டோருக்கு இடங்கள்

## மக்கள் தொகை அடிப்படையில் ஒதுக்குமாறு தாக்கீது

புதுடில்லி, செப். 10—

கிராமப் பஞ்சாயத்துகள் உள்பட உள்ளாட்சிக் கழகங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலை சாதியினருக்கு அவர்களது மக்கள் தொகை அடிப்படையில் இடங்கள் ஒதுக்குமாறு மாநில சர்க்கார்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனராம்.

உள்ளாட்சிக் கழகங்களில் சில மாநிலங்கள் மேற்சொன்ன இரு பிரிவினருக்கும் இடங்கள் ஒதுக்கியிருப்பதாகவும், சில மாநிலங்கள் ஒதுக்கவில்லை யென்றும் கூறப்பட்டிருக்கிறது.

மக்கள் சபையிலும், மாநிலங்கள் சபையிலும் அவர்களுக்கு இடங்கள் ஒதுக்குவதற்கு அரசியல் சட்டம் வகை செய்கிறதென்றும், உள்ளாட்சிக் கழகங்களிலும் இடம் ஒதுக்குவது விரும்பத்தக்க பலனை அளிக்குமென்றும் அவ்வகுப்பினருக்கான கமிஷனர் கூறியுள்ளார்

# சபைத் தலைவரை மீறக்கூடாது!

சபையிலுள்ள எந்த உறுப்பினரும் சபைத்தலைவரின் ஆணையை மீறக்கூடாது என்று, மக்கள்சபையில் சபைத் தலைவர் அனந்தசயனம்ஐயங்கார் குறிப்பிட்டிருக்கிறார்.

அவ்வாறு மீறுவதானது, சபைத் தலைவரை அவமதிப்பதாகும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆர். வேலாயுதம் என்ற மக்கள் சபை உறுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட இனத்தவர் மசோதாபற்றிப் பேசுகையில், சபைத்தலைவர் அவரை, அம்மசோதாவைப் பொறுத்துள்ள குறிப்பான பிரச்சினைகள்பற்றி மட்டுமே பேசவேண்டுமென்றும், அந்த இனத்தவர் பிரச்சினைகளிலுள்ள பொதுவான காரியங்கள் குறித்துப் பேசக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டபோது அவ்வுறுப்பினர் அதை மீறியிருக்கிறார். அதைத் தொடர்ந்தே சபைத் தலைவர் மேற்கண்டவாறு உறுப்பினரை எச்சரித்திருக்கிறார்.

சபைத் தலைவரின் இந்த எச்சரிக்கையையொட்டி உறுப்பினர் தம் பேச்சை நிறுத்திக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

# 2-இலட்சம் தற்காப்பு இலாகா ஊழியர்கள் வேலைநிறுத்தம்?

## ஆட்குறைப்பு செய்யப்படுவதை எதிர்த்து நடவடிக்கை

பூனா, செப் 9—

பூனாவில், தற்காப்பு இலாகாவில் பணிபுரியும் சிவில் ஊழியர்களில் 1,800 பேர் வேலையிலிருந்து நீக்கப்படுவர் என்றும், இதை எதிர்த்துப் போராடுவதற்காக இந்தியாவெங்கிலும் தற்காப்பு இலாகாவில் உள்ள சிவில் ஊழியர்கள் 2-இலட்சம் பேரும் எந்த நேரத்திலும் வேலைநிறுத்தத்திற்குத் தயாராக இருக்குமாறு கேட்கப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது.

மொத்தத்தில், இலாகாவில் 6 000 பேர்வரை உபரியாக இருப்பதாகவும், இவர்களுக்கு வேலை இல்லை என்றும், ஆகவே அவர்களை இலாகாவிலிருந்து நீக்கிவிட உத்தேசிக்கப்பட்டிருப்பதாயும் ஊழியர் சங்கத்தவர் கூறுகின்றனர்.

சர்க்கார் இந்த ஆட்குறைப்புத் திட்டத்தை அமுல்செய்யக் கூடாதெனவும், அப்படி அமுல் செய்தால் பெரும் கிளர்ச்சி ஏற்படுமெனவும் எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

### இரயில்வேஊழியர்களுக்குக்
# குடியிருப்பு வசதிகள்

### ரூ. 500 இலட்சம் வரை செலவிட உத்தேசமாம்

புதுடில்லி, செப். 10—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், தென்பகுதி இரயில்வே சிப்பந்திகளுக்குக் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு ரூ. 500 இலட்சத்திற்குமேல் செலவு செய்யப்படக்கூடும் எனத் தெரிய வருகிறது.

மூன்றாவது பிரிவு ஊழியர்களுக்கு 2,500 குடியிருப்புகளும், 4-வது பிரிவு ஊழியர்களுக்கு 6,000 குடியிருப்புகளும் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது; இதற்கு ரூ 363 இலட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நான்காவது வகுப்பு சிப்பந்திகளுக்கு ஏற்கனவேயுள்ள குடியிருப்புகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூ 50 இலட்சம் செலவிடப்படுமாம்.

கெசட் பதிவுள்ள அதிகாரிகளுக்கு 77 குடியிருப்புப் பிரிவுகளே கட்டப்படும்.

# தபால் ஊழியர் கோரிக்கைகள்

### 183 நிராகரிக்கப்பட்டனவாம்

கல்கத்தா, செப். 10—

1951-ம் ஆண்டு முதல் 1955-ம் ஆண்டுவரை, தபால்—தந்தி இலாகா ஊழியர்கள் 471 கோரிக்கைகளை எழுப்பியதாகவும், இவற்றில் 211 கோரிக்கைகள் ஏற்கப்பட்டன என்றும், 183 கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன என்றும், 77 கோரிக்கைகள் இன்னும் பரிசீலனையிலிருக்கின்றன என்றும் மத்திய செய்திப் போக்குவரத்து இலாகா மந்திரி ராஜ்பகதூர் இங்கு தெரிவித்திருக்கிறார்.

### தகுதிவாய்ந்த மாணவர்க்கு நிதி உதவியாம்!

தகுதிவாய்ந்த மாணவர்களுக்குத் திருப்பி தரக்கூடிய கடன் உதவி செய்வதற்கான விசேட நிதி ஒன்றைத் திரட்டுவதற்கு டில்லி கல்வித் தொழில் கூட்டுறவு சங்கம் தீர்மானித்திருக்கிறது.

★

# மாநிலமெங்கும் பொது வேலைநிறுத்தம்

## விலை ஏற்றத்தைக் கண்டித்து மேற்கு வங்கத்தில் நடவடிக்கை

கல்கத்தா, செப் 9—

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் தொடர்ந்து ஏறுமுகத்திலிருப்பதையும், அதைத்தடுக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்காத சர்க்காரையும் கண்டிக்கும் வகையில், இந்த செப்டம்பர் 25-ந் தேதியன்று, ஒரு பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறு எல்லா தொழிற்சங்கங்களும் மேற்கு வங்க மக்களைக் கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# திராவிட நாடு விடுதலை (பிரிவினை) வாரம் கொண்டாடுவீர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க நாளான 17—9—56-ஆம் நாளிலிருந்து 23—9—56-ஆம் நாள்வரை **திராவிடநாடு விடுதலை (பிரிவினை) வாரமாகக்** கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும், கழகச் சார்புள்ள அமைப்புக்களையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்திக் கருத்து விளக்கம் செய்யுமாறு மகிழ்ச்சியோடு கேட்டுக் கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை-13
1—9—56

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

# வடவர் நம்மவருமல்ல — நல்லவருமல்ல!

## நேரு மீண்டும் உறுதி செய்கிறார்!

## இலங்கையிலிருந்து துரத்தப்படுவோருக்கு வாழ்வுதர டில்லி தயாராக இல்லையாம்

*மாநில சர்க்காரே கவனித்துக்கொள்ளுமாம்*

புதுடில்லி, செப். 11—

"இலங்கையிலிருந்து திரும்பிவரும் இந்தியர்கள் தங்கள் சொந்த வீடுகளுக்கோ அல்லது உறவினர் வீடுகளுக்கோ சென்றுவிடுகிறார்கள்; இலங்கையிலிருந்து வரும்போது அவர்கள் தங்கள் சொத்துக்களை வரியில்லாமல் கொண்டுவருவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்; எனவே, அவர்கள் எல்லோரும் நாடற்றவர்கள் என்று பிரகடனப்படுத்தவோ, அவர்களுடைய குடியமைப்பிற்காக ஏதேனும் திட்டம் தயாரிக்கவோ அவசியமில்லை என்று சர்க்கார் கருதுகிறது,"

என்று, மக்கள்சபையில் வெளிநாட்டு விவகாரத்துறை இலாகா பாராளுமன்றச் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

இந்தப் பதிலை மேலும் விளக்கி பிரதமர் நேரு கூறியதாவது:—

"இலங்கையிலிருந்து திரும்பி வரும் இவர்கள் அனைவரும் இந்தியக் குடிமக்களே; மற்றவர்கள் குறித்து, அவர்கள் இலங்கையரா அல்லது நாடற்றவர்களா என்பது குறித்து இலங்கை சர்க்காருடன் இந்திய அரசாங்கம் விவாதித்து வருகிறது.

"இலங்கை சர்க்கார், குடியுரிமை வழங்க மறுத்ததின் விளைவாக நாடு திரும்பும் இந்தியக் குடிமக்களின் எண்ணிக்கை பெருகிவிடுவதுதான் இன்றிருக்கிற உண்மையான பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினை திரு-கொச்சி மாநிலத்தை மட்டும் தான் எதிர்நோக்கியிருக்கிறது என்பது மட்டுமல்ல; சென்னை மாநிலத்தின் பல மாவட்டங்களிலும் இப்பிரச்சினை இடம் பெற்றிருக்கிறது.

"என்றாலும், இவர்களுடைய நலனைக் கவனித்துக்கொள்வதற்கென தனியான விசேட இலாகா ஒன்று நிறுவ அவசியப்படவில்லை என்றே நான் நினைக்கிறேன். அவர்களுடைய பிரச்சினைகளை எல்லாம் சமாளித்துக்கொள்ள அந்தந்த மாநில சர்க்கார்களே சிலவகை நடவடிக்கை ஏற்பாடுகளைச் செய்துள்ளன என்று நம்புகிறேன்."

## போதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் வழங்கிய 'இலக்கிய இன்பம்'

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

சொல்ல முயன்றாலும், 'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடலில், நாழிமுகக்காது நானாழி' என்பதற்கொப்ப, என்னால் அத்தனையும் எடுத்தியம்ப முடியாது.

இலக்கியமென்பது, உள்ளதை அப்படியே எடுத்துச் சொல்வது அல்ல; உள்ளதைக் காணும்போது எழக்கூடிய உணர்ச்சிக்கு வயப்பட்டு, இயற்கையோடு ஒத்த கற்பனையைக் காட்டி உள்ளதை எடுத்துச் சொல்லுவது இலக்கியமாகும்.

"இலக்கியக் கர்த்தாக்கள், கவிஞர்கள், புலவர்கள் எல்லாம் உள்ளதை மட்டுமின்றி, அதிலிருந்து சற்று விலகி, 'இது இப்படியும் இருக்கலாம்' என்று ஒரு 'கனவு'—ஒரு 'கோடு' இட்டுக் காட்டுவார்கள்.

"ஆனால், உலகில் வேறெந்த மொழி இலக்கியத்திலும் இல்லாத ஒரு சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு. அகத் துறைப் பாடல்கள தமிழ் மொழியில் மட்டுமே உள்ளன.

"காதல் உணர்ச்சியைச் சித்திரிக்க குறிப்பிட்ட பாத்திரங்களைச் சிருஷ்டித்துக் கொள்ளாமல், தலைவன்—தலைவி — தோழி என்ற பொதுப் பெயர்களை வைத்துக் கொண்டே, காதல் எப்படிப்பட்டது என்பதை எடுத்துரைக்கிற இலக்கியங்கள் தமிழில் தான் உண்டு. மேலும், கூறப்படும் உவமைகளில் உள்ளுறைப் பொருள்களைச் செருகி, தமிழ்ப் புலவர்கள் கவிதைகளைப் புனைந்திருக்கின்றனர். பழங்காலத் தமிழ்ப் புலவர்கள் உவமைகளைக் கூறும்போதும் உள்ளுறைப் பொருளுடன் தான் அமைத்துள்ளனர்.

(இந்த இடத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இந்தக் கருத்துக்கு ஆதாரமாக, சில தமிழ்க் கவிதைகளை மேற்கோள் காட்டினார்.

தமிழ் இலக்கியங்களின் சிறப்புக் குறித்து இத்தகு பொதுப்படையான கருத்துக்களை சிறிய முறையில் விளக்கிவிட்டு, அந்த பெருமைக்குரிய தமிழ் இலக்கியங்கள் அடக்கி வைத்துக்கொண்டிருக்கும் இன்பத்தில் சிலவற்றை கூடியிருந்தோருக்கு எடுத்து வழங்கினார்.

அகநானூற்றில் உள்ள பாடல் ஒன்றினைக்கூறி அதற்குத் தந்த விளக்கம் கூடியிருந்தோரை மகிழச் செய்தது."

## 6000 தொழிலாளர்கள் வேலை இழப்பர்

புதுடில்லி, செப். 11—

இராணுவத் தொழிற்சாலை, இராணுவ நிறுவனங்கள் ஆகியவற்றில், வேலையிலிருந்து விலகி ஊதியம் பெற்றுவரும் 6,000 தொழிலாளர்கள் இருக்கின்றனர் என்றும் எனவே அடுத்த சில தினங்களுக்குள்ளாகவே இந்நிறுவனங்களில் ஆட்குறைப்பு செய்வதெனவும் சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனராம்.

ஆட்குறைப்பு செய்யப்படும் ஊழியர்களுக்குப் பிராவிடண்ட் பண்டில் சர்க்கார் பங்கும், ஒரு வருட சர்வீசுக்கு அரைமாத ஊதியம் வீதமும் ஆட்குறைப்பு நஷ்டயீடு தரப்படுமாம். இந்தத் தகவலை மக்கள் சபையில் பாதுகாப்புத் துறை அமைச்சர் டாக்டர் கட்ஜு தந்துள்ளார்.

## 10,000 நியாய விலைக்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நியாய விலையில் விற்பனை செய்யப்படுகின்றனவாம்!

இந்தக் கடைகள், உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த பெரும் அளவு பயன்படுகின்றனவாம்!

# இலங்கை தமிழருக்கு அநீதி இழைக்கப்படவில்லையாம்

## இந்தியாவிலுள்ள தூதுவர் கூற்று

சென்னை, செப். 11—

"இலங்கைத் தமிழர் தம்மொழிப் பிரச்சினை குறித்து எந்தவிதக் கவலையும், சந்தேகமும் கொள்ளத் தேவை இல்லை; இலங்கைத் தமிழர்கள் தங்கள் மொழியை வளர்த்துக்கொள்வதற்கான எந்த வாய்ப்பையும் இலங்கை சர்க்கார் பறித்து விடாது,"

என்று, இந்தியாவில் இலங்கைத் தூதுவராக உள்ள சர் எட்வின் விஜயவர்த்தனே என்பார் கூறியிருக்கிறார்.

தென்னாட்டுப் பத்திரிகைகள், இலங்கை மொழிப் பிரச்சினைக்கு அதிகமான முக்கியத்துவம் தருகின்றனவாம்.

இலங்கை மொழிப்பிரச்சினைக்கு இலங்கை சர்க்கார் கண்டுள்ள பரிகாரம் சரிதானா என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்னால் சர்க்காரின் பரிகாரம், சில நாள் அமுலாவதற்கு வாய்ப்புத் தரப்படல் வேண்டும் என்றும் அவர் கூறினாராம்.

தென்னாட்டில், இலங்கைத் தமிழருக்காக எழுப்பப்படும் குரலில் 'சென்னை சர்க்காருக்கோ டில்லி சர்க்காருக்கோ பங்கு இல்லை' என்பதை அறிய நாங்கள் பரம திருப்தி அடைகிறோம்; இனியும், இலங்கையின் உள்நாட்டு விவகாரமான மொழிப் பிரச்சினையில் அவர்கள் தலையிடமாட்டார்கள் என நான் நம்புகிறேன்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

## 'விஷைத்தறி திட்டத்தை கைவிடுக'

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கும் இதாருக்கும் கைத்தறித் துண்டுகளும் கைக்குட்டைகளும் அளிக்கப்பட்டன.

கூட்டத்தில் நிறைவேறிய மற்றுமோர் தீர்மானமாவது:—

குன்றத்தூர் தெருக்களில் நெசவாளர்கள் பாவு போடுவது போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறதென்றும், தெருக்களில் பாவு போட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், ஊராண்மைக் கழகத்தார் உத்தரவு ஒன்று பிறப்பித்திருக்கிறார்கள். இவ்வூரில் பஸ் போகும் வீதி தவிர மற்ற தெருக்களில் போக்குவரத்து நெருக்கடி ஏதும் கிடையாது; மேலும், பாவு போட வேறு இட வசதியும் இல்லை; வியர்வின் இரத்தத்தை வியர்வையாக்கி உழைக்கும் ஆயிரக்கணக்கான ஏழை நெசவாளர்களை இந்த உத்தரவு பாதிக்கிறது என்பதால், அதனை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு, உடனடியாக உத்தரவை திரும்பப் பெறுமாறு இக்கூட்டத்தின் மூலம் ஊராண்மைக் கழகத்தாரை கேட்டுக்கொள்ளப்படுகிறது. (ந. - கி.)

## சி. பி. சிற்றரசு

### சுற்றுப்பயணம்

✶

செப். 14: மதுரை
15: குளிக்கரை
16: பேரையூர்
17: திருச்சி
18: கல்லக்குடி
19: கோனாகல்வி
20: சகலகண்டபுரம்
23: சென்னை— கொத்தவால்சாவடி
24: திருபெரும்புதூர்
25: கிளாச்சேரி
29: சென்னை 26-வது வட்டம்

# துணிகளின் நியாய விலைகளை சர்க்கார் அறிவிக்குமாம்

## கொள்ளை இலாபமடிப்பதைத் தடுப்பதே நோக்கமாம்

புதுடில்லி, செப். 11—

அவ்வப்போது, பலரகத் துணிகளின் நியாயமான விலைகளை சர்க்கார் மக்களுக்கு அறிவிப்பார்களாம்!

இதன் மூலம், துணி வியாபாரத்தில் கொள்ளை இலாபமடிப்பதைக் கட்டுப்படுத்த முடியுமாம்!

ஆங்கிலம், மற்றும், வட்டார மொழி செய்தித் தாள்களில் விளம்பரமாக நிதி இலாகாவினர் பலரகத் துணிகளின் நியாய விலையை அறிவிப்பர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## நெல்லை நகர தி. மு. கழகக் கிளைத் தேர்தல்

"16—9—56 ஞாயிறு காலை 11-மணிக்கு, நெல்லை நகர தி. மு. கழகக் கிளைத் தேர்தல் நெல்லை-சந்திப்பு 'கிரீன் லாட்ஜ்' ஓட்டலில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வர வேண்டுகிறேன். உறுப்பினராகச் சேர்ந்த தோழர்களுக்கு அன்று காலை 8-மணியிலிருந்து 'கிரீன் லாட்ஜில்' உறுப்பினர் சீட்டுக்கள் வழங்கப்படும்"

என்று நெல்லை மாவட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அறிவிக்கிறார்.

## மதுரை மாவட்ட கழகத் தோழர்களுக்கு:

"மதுரை நகரில் 16—9—56 அன்று திராவிட நாடு விடுதலை (பிரிவினை) நாள் கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்து கொள்ளுகிறார்கள்.

"தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டி வைத்துள்ள மதுரை மாவட்டக் கழகத் தோழர்களும் அனுதாபிகளும் அன்று மதுரை கூட்டத்தில் அண்ணா அவர்களிடம் நிதியை வழங்கி விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்,"

என்று, மதுரை மாவட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

## சென்னை மாவட்ட

### கிளைக் கழகச் செயலாளர்கட்கு:

17—9—56-லிருந்து 23-9-56 வரை தி. மு. கழக ஆண்டு விழாவினையும், திராவிட நாடு பிரிவினை வாரத்தையும் சிறப்பான முறையில் கொண்டாடும்முகத்தான் கிளைக் கழகப் பணிமனையையும், வீதியையும், தோரணங்களாலும் வளைவுகளாலும் அலங்கரித்தும் கொடியேற்றியும், சுவரொட்டிகளாலும் துண்டு வெளியீடுகளாலும், ஊர்வலத்தின் மூலமாகவும் பொதுக்கூட்டத்தின் வாயிலாகவும், இன்னபிற கலைநிகழ்ச்சிகளை நடத்தியும் இவ்விழாவினைச் சிறப்பிக்குமாறு சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கேட்டுக் கொள்ளுகிறார்.

## செங்கற்பட்டு மாவட்ட

### கிளைக்கழகத் தோழர்களுக்கு:

"23—9—56 முதல் நமது மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்ய தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, டி. இராசரத்தினம் ஆகியவர்களுடன் நான் வரும்சமயம், அந்தந்த ஊர் கிளைக்கழகத் தோழர்கள், நான் பிறகு குறிப்பிடும் அஞ்சலில் கண்டுள்ள நாளில், கழகத் தோழர்களுடன் கலந்து பேசுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்,"

என்று, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் டி. என். சம்பந்தம் அறிவிக்கிறார்.

## 40 சுவிட்சர்லாந்து எஞ்சினீயர்கள்

### பெரம்பூர் தொழிற்சாலைகளில் யோசனை கூறிவருகின்றனராம்

புதுடில்லி, செப். 11—

பெரம்பூரிலுள்ள இரயில் பெட்டி உற்பத்தித் தொழிற்சாலையை அடுத்து ஒரு சிறிய 'தொழிற்சாலை' சமீபத்தில் நிறுவப்படும் என்றும், இரயில் பெட்டிகளுக்கான 'பெஞ்சு' போன்ற தட்டுமுட்டுச் சாமான்கள் இங்கு உற்பத்தி செய்யப்படும் என்றும் மக்கள் சபையில் இரயில்வே மந்திரி தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், இப்பொழுது சுமார் 40 சுவிட்சர்லாந்து எஞ்சினீயர்கள் பெரம்பூர் தொழிற்சாலையில் இரயில் பெட்டி உற்பத்திகளுக்கான யோசனைகளைக் கூறி வருவதாகவும் தெரிவித்தார்.

## குந்தா நீர்விசைத் திட்டத்திற்குக் கனடா உதவி

புதுடில்லி, செப். 11—

சென்னை மாநிலத்தில் அமைக்கப்பட இருக்கும் குந்தா நீர்விசைத் திட்டத்திற்கு 20 இலட்சம் டாலர் மதிப்புப் பெறக்கூடிய இயந்திரங்களை அளிப்பதற்குக் கனடா ஒப்புதல் அளித்துள்ளதாக மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

## திருமணங்கள்

13-9-56 காலை 7 மணிக்கு சென்னை—திருவொற்றியூர் தென்னண்டை மாடவீதி எண்-34 இல்லத்தில், துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையில், 8-வது வட்ட தி. மு. கழக செயலாளர் தோழர் சோமசுந்தரம்—தோழியர் மல்லிகேசுவரி திருமணம் நடைபெறும்; தோழர்கள் மு. கருணாநிதி, சி. ஆர். பாலசுந்தரம், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

13-9-56 காலை 8 மணிக்கு தோழர் பி. ஏழுமலை—தோழியர் சகுந்தலா திருமணம் தோழர் வி. சி. தமிழ்தாசன் தலைமையில் பூந்தமல்லிக்கு அடுத்த அய்யப்பன் தாங்கல் பசனை கோயில் தெரு, எண்-61 இல்லத்தில் நடைபெறும்; தோழியர் சத்தியவாணிமுத்து வாழ்த்துரை வழங்குவார்.

* * *

13-9-56 காலை 7-30 மணியளவில், அரக்கோணம், கிரிபில் பேட்டை, எண் 1/11 இல்லத்தில் தோழர் சண்முகம்—தோழியர் புஷ்பா திருமணம் நடைபெறும்; தோழர்கள் ப. புகழேந்தி, கோ. வெற்றிவீரன், பெரு இளவெயினன், வி டி. சாமி வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.